இறைவனின் திருப்பெயரால்...

# ரமளான் நோன்பின் சிறப்புகள் மற்றும் சட்ட திட்டங்கள்

## ரமளான் மாதம் சிறப்பு எதனால்?

ரமளான் மாதம் எத்தகையதென்றால் அதில்தான் மக்களுக்கு வழிகாட்டியாகவும், நேர்வழி மற்றும் (உண்மை, பொய்யைப்) பிரித்தறிவிப்பதன் தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும் இந்தக் குர்ஆன் அருளப்பட்டது.

அல்குர்ஆன் 2:185

ஒரு முஸ்லிமின் கட்டாயமான செயல்களில் தொழுகைக்கு அடுத்து நோன்பாகும். சக்தி பெற்ற அனைத்து முஸ்லிம்கள் மீதும் நோன்பு கட்டாயக் கடமையாகும்.

## நோன்பின் நோக்கம் என்ன?

இறைநம்பிக்கை கொண்டோரே ! உங்களுக்கு முன்னிருந்தோர் மீது கடமையாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் குறிப்பிட்ட நாட்கள் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. (இதனால்) நீங்கள் இறையச்சமுடையோர் ஆகலாம்.

அல்குர்ஆன்- 2:183

'யார் பொய்யான பேச்சையும், பொய்யான நடவடிக்கைகளையும் விட்டு விடவில்லையோ அவர் தமது உணவையும் பானத்தையும் விட்டு விடுவதில் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையுமில்லை! என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரலி), ஆதாரம்: புகாரி 1903

## பிறை பார்த்து நோன்பு வைக்க வேண்டும்

நபி (ஸல்) கூறினார்கள் : ரமலான் பிறையை நீங்கள் காணும் வரை நோன்பு நோற்காதீர்கள், (மறு) பிறையைக் காணும்வரை நோன்பை விடாதீர்கள் ; உங்களுக்கு மேகமூட்டம் தென்படுமானால் (30 நாட்களாக) கணித்துக் கொள்ளுங்கள்.

நூல்:புகாரி 1906

## நோன்பாளியின் மகிழ்ச்சி

நபி (ஸல்) கூறினார்கள் : நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் உள்ளன நோன்பு திறக்கும் போது நோன்பின் காரணமாக மகிழ்ச்சியடைகிறான் ,தன் இறைவனை சந்திக்கும் போது மகிழ்ச்சியடைகிறான்.

நூல் : புகாரி 1904

## நோன்பாளியின் சிறப்பு

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நோன்பாளியின் வாயிலிருந்து வீசும் வாடை அல்லாஹ்விடம் கஸ்தூரியின் வாடையை விடச் சிறந்ததாகும்

நூல் : புகாரி 1894

## சஹருக்கு இரண்டு பாங்கு

நபி ஸல் அவர்கள் கூறினார்கள் பிலால் இரவின் கடைசியில் பாங்கு சொல்வார் , அப்துல்லாஹ் பின் உம்மி மக்தூம் (ஸுபீஹுக்கு) பாங்கு சொல்லும் வரை உண்ணுங்கள்.

நூல் : புகாரி 623

## நோன்பு நோற்க்கும் நேரம் மற்றும் துறக்கும் நேரம்

(இரவு என்ற) கருப்பு கயிற்றிலிருந்து அதிகாலை எனும் வெள்ளைக்கயிறு உங்களுக்குத் தெளிவாகும் வரை உண்ணுங்கள்: பருகுங்கள்! பிறகு இரவு (தொடங்கும்) வரை நோன்பை முழுமைப்படுத்துங்கள்.

அல்குர்ஆன் 2:187

## நோன்பு திறப்பதை விரைவுபடுத்த வேண்டும்

பேணுதல் என்ற பெயரில் நோன்பு திறப்பதை தாமதப்படுத்துவது தவறாகும்.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நோன்பு துறப்பதை விரைவு படுத்தும் காலமெல்லாம் மக்கள் நன்மையில் நிலைத்திருப்பார்கள்.

நூல் : முஸ்லிம் 2003

## ரமலான் இரவுத் தொழுகை எத்தனை ரக்அத்கள்

நபி (ஸல்) அவர்களின் தொழுகை ரமலானில் எவ்வாறு இருந்தது ? என்று ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்டேன் அதற்கவர் ரமலானிலும் ரமலானல்லாத மாதங்களிலும் பதினோரு (11) ரக்அத்களை விட அதிகமாக தொழமாட்டார்கள். நான்கு ரக்அத் தொழுவார்கள் அதன் அழகையும், நீளத்தையும் கேட்காதே ! பின்னர் நான்கு ரக்அத்கள் தொழுவார்கள் அதன் அழகையும் , நீளத்தையும் பற்றிக்கேட்காதே ! பின்னர் மூன்று ரக்அத்கள் தொழுவார்கள் என்று கூறினார்கள்.

நூல் : புகாரி 1147

## லைலத்துல் கதர்

மதிப்புமிக்க அந்த இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்ததாகும். அல்குர்ஆன் 97:3

## லைலத்துல் கத்ர் இரவு எப்போது?

நபி (ஸல்) கூறினார்கள் : லைலத்துல் கதர் இரவு எனக்குக் காட்டப்பட்டது பின்னர் அது எனக்கு மறக்கடிக்கப்பட்டுவிட்டது எனவே கடைசி பத்து நாட்களில் அதைத் தேடுங்கள். அந்த நாட்களிலுள்ள ஒவ்வொரு ஒற்றைப் படை இரவுகளில் அதைத் தேடுங்கள்.

நூல் : புகாரி 2018

## நோன்புக்குரிய நிய்யத் வாசகம்

**நவைத்து சவ்ம கதின்..** (நாளைக்கு நோன்பு வைக்க நிய்யத் வைக்கிறேன்.)
நோன்பு வைப்பதற்கு இதுபோன்ற நிய்யத்தை மொழிவது பித்அத்தாகும்.

## நோன்பு திறக்கும் துஆ

தமிழகத்தில் நோன்பு துறக்கும் துஆவாக அல்லாஹும்ம லக்க சும்த்து.. என்று துவங்கும் துஆவை ஓதி வருகிறார்கள். நோன்பு திறப்பதற்கான துஆக்களுக்கு நபிமொழியில் சரியான ஆதாரம் இல்லை. இது பற்றிய அனைத்து செய்திகளும் பலவீனமானதாகவே உள்ளது.

தஹபள்ளமவுஞ் என்று ஆரம்பிக்கும் நோன்பு துஆவும் பலவீனமான செய்தி ஆகும்.

எனவே சாப்பிடும் போது பிஸ்மில்லாஹ் கூற வேண்டும் என்ற (புகாரி 5376) நபிமொழிக்கேற்ப நோன்பு துறக்கும் போதும் “**பிஸ்மில்லாஹ்**” கூறுவது தான் சரியான நடைமுறை ஆகும்.

## ரமளானில் தர்மம் செய்வோம்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மக்களிலேயே செல்வங்களை அதிகமாக வாரி வழங்கக்கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் ரமளான் மாதத்தில் மேன்மேலும் அதிகமாக வாரி வழங்குவார்கள்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி), ஸஹீஹ் முஸ்லிம் : 4622.

வெளியீடு :

**தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்** மாநிலத் தலைமையகம்

**ரமளான் (2022) ஸஹர் நேர சிறப்பு நிகழ்ச்சிகள்**

புதுயுகம் தொலைகாட்சியில்
அதிகாலை 3:30 மணி முதல் 4:30 மணி வரை

தமிழன் தொலைக்காட்சியில்
அதிகாலை 3:30 மணி முதல் 5:00 மணி வரை

**பித்அத் ஒழிப்பு மாநாடு**
இன்ஷா அல்லாஹ் பிப்ரவரி 5, 2023, திருச்சி.